

கீழடி பதிப்பகம்

# இந்த இரவு முடியாது

ஊதா மூங்கில்

# இந்த இரவு முடியாது

**ஊதா மூங்கில்**

கீழடி பதிப்பகம்

தலைப்பு:
**இந்த இரவு முடியாது**

கதையாசிரியர்:
**ஊதா மூங்கில்**


பதிப்பாளர்கள்
**மதனகோபால். ரா**
**வெங்கடேஷ். ரா**

முதற்பதிப்பு :
**செப்டம்பர் 2017**

---

கீழடி பதிப்பகம்

2/1049, ஸ்டேட் பேங்க் காலனி,
4வது தெரு, சாட்சியாபுரம்,
சிவகாசி - 626 124

மின் அஞ்சல் :
**keezhadi@gmail.com**


---


இந்த புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறு பிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு மற்றும் நகல் எடுப்பது, ஒலிப்பதிவு செய்வது அல்லது எந்த தகவலையும் சேமிப்பு மற்றும் திரும்பப்பெரும் முறையில் பயன்படுத்துவதோ கூடாது

# ஆசிரியர்

நான் அறிந்த, உணர்ந்த நிகழ்வுகள் எல்லாம் என்னுள் நுழைந்து, கற்பனை கோட்டையினுள் புகுந்து, தென்றலாய் கதைகளாய் உங்க மன பூஞ்சோலையில் தவழ துடிக்கின்றது.

**- ஊதா மூங்கில்**

இறைவனுக்கு நன்றி

# இந்த இரவு முடியாது

அழகான இரவு. ஜெனி தனது வழக்கமான வேலைகளை முடித்துவிட்டு, மகளையும் மகனையும் வழக்கம் போல தூங்க வைத்து விட்டு, கணவனுடன் வழக்கம் போல அன்று நடந்தவைகளை கூறிவிட்டு, வழக்கம் போல அவளுடைய இடத்தில் சென்று படுத்துக்கொண்டாள். இன்றைய தினத்தில் அவளது அத்தனை வழக்கங்களும் வழக்கம் போல வந்து சென்றது.

ஆனால் இந்த இரவு வழக்கமானதாக இல்லை. திடீரென தூக்கம் களைந்தாள். இப்பொழுது தான் தூங்கியது போல் இருந்தாலும், இரவு நீண்ட தூரம் சென்று இருந்தது. ஜெனி படுக்கையில் இருந்து எழுந்தாள், நடந்தால், வீடெங்கும் வலம் வந்தாள். நிசப்தமும், அவள் பாத சத்தமுமே துணை அங்கு அவளிற்கு. காரணம், மகள் மகன் கணவன் என அவள் தூங்க செல்வதற்கு முன்பு அவள் கண்ட எந்த சொந்தமும் இப்பொழுது இல்லை. வீடு சற்று கலைந்து இருந்தது. பொருட்கள் இடம் மாறி இருந்தது. குழம்பினாள். கலங்கினாள். பறிதவித்து போனாள். பயந்தும் போனாள்.

அங்கு என்ன நடந்து இருக்கும் என அவளால் யூகிக்க முடியவில்லை. அது  அவளால்முடியாது என அறிந்ததும், அவள் அங்கு இருக்கவும் விரும்ப வில்லை. வீட்டை விட்டு வெளியேறினாள். அழகிய நிலவு, அதை ஆசையுடன் காண இயலா அவசர மனநிலை. நெடு வீதி ஒன்று, அதில் நடக்க தொடங்கினாள். வீதியின் இருபுறத்திலும் மரங்கள் இருந்த போதும், காற்று வந்து பேசி செல்லாததால் சோகத்தின் சொந்தமாக அசையாமல் நின்று இருந்தன. வீதியோர மின் விளக்குகள், அமைந்து அமைந்து எரிந்தன என்பதை விட, அவளது பயத்தை அழகாக வெளிப்படுத்தின என்று தான் சொல்ல வேண்டும்.

வீதி வளர்ந்து கொண்டே இருந்தது. ஜெனியின் நடையும் அதற்கு ஈடு கொடுத்துக் கொண்டே இருந்தது.

நடுநிசியின் நிசப்தத்தை இன்றே அவள் முதன் முதல் உணர்கிறாள். அதுவும் தன்னை சுற்றி என்ன நடக்கிற-து என்று தெரியாத குழப்பத்திலும் பயத்திலும். அதை அவளால் ரசிக்க முடியவில்லை. ஆனால் இந்த இரவு அவளை ரசிக்கிறது. அவளின் சிறு சிறு பயத்தையும் ரசி-க்கிறது. அவளை அனு அனுவாய் ரணமாக்குகிறது.

ஜெனி வீதியை விட்டு சாலையில் நடக்கத் தொடங்கிய சிறுது நேரத்திலே, திடீரென ஒரு சத்தம். ஒரு முணுமு-ணுக்கும் சத்தம். பெரியளவு ஒன்றும் இல்லை என்றாலு-ம், இந்த இரவில் இதுவரை அவளுடன் குடிக்கொண்டு இருந்த நிசப்தத்தை அது கொஞ்சம் தள்ளி நிற்கச்செய்த-து. சத்தம் வந்த திசையில் திரும்பி பார்க்க, சத்தம் வந்தது ஒரு பழைய நூலகம் ஒன்றிலிருந்து என்பது புரிந்தது.

சாலையில் மையமிட்டு இருந்த அந்த நூலகத்தின் வாயி-ற்கதவை திறந்து உள் செல்ல, கொஞ்சம் நீண்ட கான்க்ரி-ட்டாலான ஒரு குறுகிய பாதை அவளை நூலகத்தின் முன் வாசலுக்கு அழைத்து சென்று கொண்டு இருந்தது. அந்த பாதையின் இருப்பக்கங்களிலும் நீண்ட காய்ந்த மரங்கள், கொஞ்சம் கொஞ்சம் இடைவெளி விட்டு நின்று, அவளது பயத்தை மேலும் ஒருபடி உயர்த்தியது.

ஜெனி நூலகத்தை நெருங்க நெருங்க சத்தங்கள் மாறத் தொடங்கின. யாரோ நடப்பது போல, எதையோ பிய்த்து எடுப்பது போல, நீர் சொட்டுவது போல, உண்பது போல,

பொருட்கள் நகர்வது போல, என நொடிகள் நகர நகர சத்தங்களும் ஒன்றை விட்டு ஒன்று நகர்ந்து கொண்டு இருந்தது. ஜெனி நூலகத்தின் கதவினை திறக்க, அந்த ஒரு நொடியில் அத்தனை சத்தங்களும் நிசப்தமானன.

அந்த நூலகத்திற்குள் ஆட்கள் யாரும் இருப்பது போல் தெரியவில்லை. அதற்கான அடையாளங்களும் தென்படவில்லை. நூலகமும், இது நூலகம் தானா என எண்ணும் அளவில் இருந்தது. அங்கு இருந்த பொருட்கள் யாவும் சிதறிக்கிடந்தன. சிதறி இருந்தவைகளை விலக்கி விட்டபடி புதுபாதை உருவாக்கி அதில் உலா வந்தாள். கீழ்த்தளத்தில் யாரும் இல்லை என்பது உறுதியாக, மேல்த்தளம் செய்ய தயாரானாள்.

மரத்தினாலான படிகளில் மெல்ல பாதங்களை எடுத்து வைத்தாள். அவை கூச்சலிட்டன, முணுமுணுத்தன, பற்களை உராய்ந்து கொண்டன. மேல்த்தளம் வந்துவிட்டது. கீழ்த்தளத்தை விட இது ஒன்றும் மோசமில்லை என்று தோன்றியது. நடந்தாள், புத்தகங்களாய் அடுக்கி இருந்த அலமாறிகளுக்கு நடுவே வலம் வந்தாள். திடீரென ஒரு சத்தம். யாரோ எதையோ உண்பது போல. சத்தம் வந்த திசையில் அவளது பாதைங்கள் அவளது உத்தரவின்றி ஊர்ந்து சென்றது.

ஒருவழியாக சத்தம் வந்த இடத்திற்கு அவளது பாதம் வந்து சேர்ந்தது. அங்கே ஒரு மனிதன், இன்னொரு

மனிதனை..... இல்லை இல்லை. ஒரு பிணம் இன்னொரு பிணத்தை உண்டு கொண்டு இருந்தது. உயிரழந்த பிணத்தை உயிருள்ள பிணம். இவள் நிற்பதையும் பார்க்கமால் அதன் பணியில் மும்முறமாக இருந்தது. சில நொடிகளில் அதன் கவனிப்பு இவள் பக்கம் திரும்பியது.

அந்த உயிரோடு இருந்த பிணம், மெல்ல இவள் மேல் பார்வையை பதித்தது. மெல்ல எழுந்தது. மெல்ல நகர்ந்தது, அதுவும் ஜெனியை நோக்கி. ஒரு பக்கம் சாய்ந்தது போல. ஆனால் ஜெனியோ நகரவில்லை, சிலையாகி விட்டாய். அந்த பிணத்தின் கோரமான முகமும், ரத்தமும் சதையுமான உடலும் அவளை பயத்தின் விழும்பில் நிற்க வைத்து, உரைய வைத்திருந்தது.

ஜெனியின் இதயம் அவளை போல் சிலையாக வில்லை. அது அங்கு இருக்கவும் விரும்பவில்லை. அங்கு இருந்து தப்பிக்க நினைத்தது. அவளை விட்டு வேகமாக வெளியேற நினைத்தது. அதற்கு அவளது மார்பு பகுதியில் வேகமாக வந்து வந்து முட்டிக்கொண்டு இருந்தது. அதற்குள் நொடிகள் மறைய தூரமும் மறைய தொடங்கியது. பிணம் ஜெனியின் மிக அருகில் வந்து விட்டது. தனது இரு கைகளையும் நீட்டியபடி, அவளை பிடிக்க, பருக, சுவைக்க என நரநரைத்த பற்களை அசைத்துபடியே அருகில் வந்து விட்டது.

இதயம் சோர்வடையவில்லை. இறுதி முயற்சி ஒன்று எடுத்து பார்க்க எண்ணியது. மொத்த பலத்தையும் ஒன்று

கூடி இடித்தது. ஏமாற்றம், இதயம் வெளியேற வில்லை. ஆனால் ஜெனி உயிர் பெற்று விட்டாள். சிலை அசைய தொடங்கி விட்டது. அதற்குள் அந்த பிணமும் ஜெனியின் மிக அருகில் வந்து விட்டது. மிக மிக அருகில். அவளை பற்றும் தூரத்தில். இதோ அதன் ஒரு கை, அது ஜெனியை பிடிக்க போகிறது.

ஜெனி அந்த கையை வேகமாக தள்ளி விட்டு ஓட திரு-ம்பினாள். ஆனால் ஒரு கை பின்னுக்கு சென்ற அதே வேகத்தில், அந்த பிணத்தின் மறு கை முன்னுக்கு வந்து, அவளது தலை முடியை பற்றி கொண்டது. அவளின் தலை வலி எடுக்க தொடங்கியது. கத்தினாள். சத்தம் பெருகியது. அதற்குள் அந்த பிணம் அவளை விழுங்க அதனை கோர வாயினை திறந்து கொண்டு வர, அடுத்து நடக்க போவதை புரிந்து கொண்ட ஜெனி, அப்பிணத்தை தள்ளினாள்.

வெற்றி. தள்ளிய தள்ளில் பிணம் சாய்கிறது. அதே சமயம் இது தோல்வியும் கூட, காரணம் ஜெனியும் அந்த பிணத்துடன் சாய்கிறாள். இருவரும் கீழே விழுகின்றனர். ஜெனி தரையிலும், பிணம் ஓர் சாய்ந்த அலமாரி மீதும் விழும். விழுந்த பின்னும் அந்த பிணத்திற்கு அவளை விழுங்கும் எண்ணமே. ஜெனி எழ முயற்சிக்கிறாள். கால்களை ஆட்டுகிறாள். உதைக்கிறாள். அவளது கால்கள் அருகில் இருந்த இன்னொரு அலமாரியின் மீது பட, அந்த அலமாரி சிறிது ஆட்டம் கண்டு, பின் அவள்

இருக்கும் பக்கம் சாய்கிறது. விழுகிறது. ஜெனியின் தலைமுடி விடுதலை அடைந்து விட்டது. முடி மட்டும் இல்லை, அதை பற்றி கொண்டு இருந்த கையும்.

அலமாரி சாய்ந்த வேகத்தில் அந்த பிணத்தின் கை துண்டாகி போனது. பிணம் என்ன ஆனது என்று தெரி-யவில்லை. அதை ஆராயும் எண்ணமும் அங்கே அவளு-க்கில்லை. எழுந்தாள், வேகமாக நடந்தாள். பதட்டதில் தெளிவாக இருந்த பாதையும் குழம்பியது. ஒருவழியாக கீழ் தளத்திற்கு செல்லும் பாதை கிடைத்துவிட்டது. படிகள் வழி இறங்கினாள். படிகள் பற்களை மீண்டும் உராய்ந்து கொண்டன.

ஜெனி கீழ் தளத்திற்கு வந்து விட்டாள். சட்டென ஒரு சத்தம், மேல் தளத்தில் இருந்து. அடுத்த நொடியே அவள் முன் குதித்து நின்றது ஒரு உருவம். அதே பிணம், ஒரு கையை பாதி இழந்த நிலைமையில். பிணம் வந்து சட்டென நின்ற அந்த நொடியில் திடுக்கிட்டு போன ஜெனி, பின் புறமாக சாயந்தாள். சாய்ந்த வேகத்தில் அவள் தலை எதிலோ மோத, அடுத்த நொடியில் ஒரு மரக்கட்டை ஒன்று, அந்த பிணத்தின் முகத்தை குறி வைத்து எகிறி வந்தது. தாக்கி-யும் விட்டது. வலது கண்ணையும் மூக்கையும் இணை-க்கும் இடத்தில் அது ஆழமாக பதிந்தது.

ஜெனிக்கும் தலையில் அடி, சிறுது ரத்தமும் கூட. சமா-ளித்து எழுந்து விட்டாள். முகத்தில் கட்டையை தாங்கிய

போதும், அதன் தாக்குதல் நிற்க வில்லை. ஜெனியை நோக்கி வேகமாக வந்தது. அந்நேரம் ஜெனியின் அருகில் ஒரு சிவப்பு நிற, தீயணைப்பான் சிலிண்டர் ஒன்று இருக்க, அதை கையில் எடுத்த ஜெனி. அதன் மூலமே அந்த பிணத்தை தள்ளியும் விட்டு, தானும் எழுந்து கொண்டாள். எழுந்த பின், அந்த தீயணைப்பானின் நீண்ட கருநிற மூக்கை பிடித்து, அதன் சிகப்பு உடலை சுழற்றி, பின் பிணத்தை நோக்கி ஒரு அடி வைத்தாள்.

அதற்குள் பிணத்தின் முகத்தில் பதிந்த, அந்த கட்டை கொஞ்சம் கொஞ்சமாக நழுவி கீழே விழுந்தது. கட்டை-யுடன் அந்த பிணத்தின் ஒரு கண்ணும் கீழே விழுந்தது. கட்டை கீழ் இறங்கிய அடுத்த நொடி, சிலிண்டர், அந்த பி-ணத்தின் முகத்தை பதம் பார்த்தது. ஜெனியின் மொத்த பலமும் அதில் முதலீடு செய்யப்பட்டு இருந்தது. அது வீணும் ஆகவில்லை. பிணமும் அதன் மீது பட்ட சிலிண்ட-ரும் ஒன்றாக பறந்து சென்றது.

ஜெனிக்கு அங்கு இருந்து தப்பிக்கும் நேரம் கிடைத்து விட்டது. வேகமாக வெளியேறினாள். தலையில் பட்ட அடி, அவளை கொஞ்சம் தாங்கி தாங்கி நடக்க செய்தது. தலையை கொஞ்சம் கிரு கிருக்க செய்தது. பாதங்கள் தள்ளாடின. நூலகத்தை விட்டு வெளியேறினாள். படிக-ளில் பாதங்கள் சொதப்ப, தடுக்கி கீழே விழுந்தாள்.

அவள் கீழே விழுந்த நொடியில், திடீரென ஒரு சத்தம்.

மரம் அறுக்கும் இயந்திரங்கள் சில ஒன்று சேர இயங்குவது போன்ற சத்தம். அது ஜெனியின் காதுகளை கிழித்து கொண்டு உள்ளே சென்றது. ஜெனி கீழே விழுந்த வண்ணமே கண்களை இறுக்க மூடி கொண்டாள். கொஞ்ச நேரம் அவளது காதுகளை பழிவாங்கிய அந்த சத்தம், சட்டென நின்றது.

ஏற்கனவே பயமும் குழப்பமும் நிரம்பி இருந்த ஜெனியின் மனதில், இப்பொழுது கண்களை திறக்கலாமா வேண்டாமா என்ற குழப்பமும் பயமும் ஒட்டி கொண்டது. கொஞ்ச நேரம் கழித்து கண்களை திறந்தாள். சுற்றியும் யாரும் இல்லை. ஆனால் மரம் ஒன்று அவளை நோக்கி சாய்ந்து கொண்டு இருந்தது, அதுவும் வேகமாக, அவளுக்கு நேராக. எழுந்து ஓட நேரம் இல்லாததால், உருண்டாள்.

அவளுக்கு அருகில் மரம் டம்மென விழுந்தது. ஜெனியின் இதயம் படபடத்து போனது. எதையுமே புரிந்து கொள்ள அவளால் இயலவில்லை. இதயம் வேகமாக துடித்தது. ஒரு மரம் தந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் அடுத்த மரம். மீண்டும் உருண்டாள். அடுத்த கணம் அடுத்த மரம். மீண்டும் உருண்டாள். இப்படியே ஐந்து முறை உருண்டாகி விட்டது.

ஐந்தாவது மரம் சாய்ந்த போது, நூலகத்தின் வாசலில், உள் இருந்த அதே பிணம் நின்று கொண்டு இருந்தது. இப்பொழுது அது வேகமாக ஓடி வருகிறது. அதுவும் வெறி பிடித்து. வேகமாக ஓடி வருகிறது, தாவுகிறது, அதுவும்

ஜெனியை நோக்கி. பிணம் மட்டுமல்ல மரமும் தான். இரண்டும் ஒருசேர, ஒரே நேரத்தில் அவள் மீதி பாய்ந்தன.

அந்த பிணத்தின் கோர முகமும், கொடூர பற்களும், ரத்தம் படிந்த விரல்களும் என அனைத்தும் அவளை குறி வைத்தே வர, அதன் மேற்பக்கம், ஒரு நீண்ட மரம் ஒன்று அவர்களை இருவரையும் நோக்கி வந்து கொண்டு இருந்தது. இவற்றில் இருந்து தப்பிக்க ஜெனி எந்த முயற்சியையும் கையாள வில்லை. காரணம், பயம் அவளை முழுவதுமாக செயல் இழக்க செய்து இருந்தது. அவளினுள் இருந்த கொஞ்ச தைரியத்தையும் கொன்று இருந்தது.

நொடிகள் மறைய, தூரம் கரைய, மரமும் பிணமும் இப்பொழுது ஜெனியின் அருகில். மிக அருகில். நூல் அளவு இடைவெளி மட்டுமே. அடுத்து அடுத்து தாக்க தயார் நிலையில் இருந்தன. அடுத்த நொடி என்ன நடக்கும் என அறிந்தவள், கண்களை இருக்க மூடினாள்.

அடுத்த நொடி, கண்களை பறிக்கும் வெளிச்சம். கண்ணில் ஊடுருவி, அதனை குறுக செய்தது. சிவா அவன் கண்ணில் மாட்டி இருந்த, வீஆர் க்ளாஸை கழட்டினான். அவனுக்கு அருகில் இருந்த கார்த்தி, அந்த வீஆர் க்ளாஸை கையில் வாங்கி கொண்டு, சிவாவிடம்,

“எப்படி இருக்கு ?”

கண்ணை தேய்த்து கொண்டே,“பயங்கரம். அப்படியே நேர்ல பாக்குற மாதிரியே இருந்தது”

“விர்ச்சுவல் ரியாலிட்டி கேம்’ன்னா சும்மாவா. இந்த கேம் ப்ரீ ஆர்டர் லையே ரெக்கார்ட் பண்ணி இருக்கு”

“டெமோலையே இந்த காட்டு காட்டுனா. மிரட்டி எடுத்து இருக்கானுங்க”

“மொக்கையாகவும் வாய்ப்பு இருக்கு”

“எனக்கு அப்படி தோனல”

“அதையும் தான் பாப்போம்” என கூறி கொண்டே, கார்த்தி வீஆர் க்ளாஷை கண்களில் மாட்டி கொண்டான்.

அதில் இருள் சூழ்ந்த திரை ஒன்றில், திஸ் நைட் நெவர் எண்ட் எனும் ஒரு தலைப்பி மெல்லிய புகைகளுக்கு இடையே ரத்தம் படிந்த படி தோன்ற, அதன் கீழ், டெமோ வெர்சன் என்ற ஒரு வாக்கியம் தோன்றி மறைந்தது. பின் ஜெனி தனது வழக்கமான வேலைகளை முடித்துவிட்டு, மகளுக்கும் மகனுக்கும் வழக்கம் போல தூங்க வைத்து விட்டு, கணவனுடன் வழக்கம் போல அன்று நடந்தவைகளை கூறிவிட்டு...

முற்றும்